I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.2
M.C.O.P.NO.87/2020 C/w.88/2020
(Joint Trial)

| | | |
|---|---|---|
| Name | : | Kanniyammal(Petitioner in MCOP No.87/2020) |
| Husband Name | : | Devaraj |
| Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.07.2025

**விசாரணை தொடங்கிய நேரம் :** 02.40 p.m

**முதல் விசாரணை**

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். வழக்கறிஞர் சொல்லி தெரிந்து கொண்டு தான் கைரேகை செய்தேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் உண்மையென்று உறுதியளிக்கிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

ம.சா.ஆ. 10–ஆதார் கார்டு

ம.சா.ஆ. 11–வங்கி கணக்கு புத்தகம்

**MCOP No. 87/2020 ல் 6வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்து சமயத்தில் ஆட்டோவில் பயணம் செய்தேன் என்றால் சரிதான். அந்த ஆட்டோ என் கணவர் தேவராஜ் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் அவர் தான்

ஆட்டோவை ஓட்டி சென்றார் என்றால் சரிதான். ஆட்டோ 6 வது எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் வாகனம் போய்கொண்டிருந்தபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதா என்றால் இல்லை, கார் தான் மோதியது. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் பின்னால் வந்து இடித்தது மோட்டார் சைக்கிள் தான் போடப்பட்டுள்ளது என்றாலும் எது சரி என்றால் கார் தான் இடித்தது.

தேவராஜ் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது மோட்டார் சைக்கிள் இடித்து தேவராஜ் கீழே விழுந்துவிட்டார் என்றும் ஆட்டோ தானாக சென்று எதிரில் வந்த கார் மீது மோதிவிட்டது என்றால் சரிதான். என் கணவரால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரிதான். எனவே 6 வது எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடும் தர வேண்டியதில்லை என்றால் சரியல்ல. மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் மீது தான் குற்ற வழக்கு பதிவாகியுள்ளது என்றால் சரிதான். எதாவது இழப்பீடு வேண்டும் என்றால் மோட்டார் சைக்கிள் ஓனரிடமும், உரிமையாளரிடமும் வாங்க வேண்டும் என்றால் சரியல்ல. எனவே 6 வது எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**4 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

ம.சா.ஆ. 2 – விபத்து நடந்த அன்று என் கணவர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் கணவர் காவல் நிலையத்தில் நடந்ததை தெரிவித்து முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதிலுள்ள விவரங்கள் உண்மை என்றால் தெரியாது.ம.சா.ஆ. 9– அடிப்பட்ட உடன் வேலூர் அரசு மருத்துவமனை, அடுக்கம்பாறைக்கு போனேன் என்றால் சரிதான். அங்கு போனவுடன் எனக்கு என்ன சிகிச்சை அளித்தார் என்பதற்கு ஆவணம்

கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். எனக்கு என்ன காயம் என்று X ray எடுத்த நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அது ம.சா.ஆ. 9 ஆகும். ம.சா.ஆ. 8–இருச்சக்கர வாகனம் ஓட்டி வந்தவர் மீது வழக்கு தாக்கல் செய்து தேவராஜ் மற்றும் அவருடைய மனைவிக்கு அடிப்பட்டது உண்மை என்று அபராதம் கட்டியுள்ளார் என்றால் சரிதான் ஆனால் என் மீது இடித்தது கார்.

நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வேலூர் டூ ஆற்காடு மேற்கிலிருந்து கிழக்காக பிள்ளையார்குப்பம் அருகே சாலையோரம் மெதுவாக சென்று கொண்டிருந்தபோது நவாப் பிரியாணி கடை எதிரில் 1வது எதிர்மனுதாரர் பதிவு எண் TN 23 CE 8968 கொண்ட Hero Honda splendor என்ற இருச்சக்கர வாகனத்தின் ஓட்டுனர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து நான் பயணம் செய்த ஆட்டோ மீது பின்புறமாக மோதிவிட்டார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இருச்சக்கர வாகனம் இடித்ததும் என் கணவர் இடது பக்கம் கீழே விழுந்துவிட்டார் என்றாலும் நான் அமர்ந்திருந்த ஆட்டோ தானாக வலது பக்கம் போனது என்றாலும் சரிதான். ஆட்டோவை ஓட்டி சென்ற 5வது எதிர்மனுதாரர் கீழே விழுந்துவிட்டார் அதன் காரணமா ஆட்டோ தானாக சென்று கொண்டிருந்தது, அதே திசையில் அதே ரோட்டில் சென்று ரோட்டில் சென்ற 3வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான காரின் வலது பக்கத்தில் இடித்தது என்றால் சரிதான். நான் போன ஆட்டோவை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் இடிக்காமல் இருந்திருந்தால் இந்த விபத்தே நடந்திருக்காது என்றால் சரிதான்.

நான் எந்த வேலையும் செய்யவில்லை. என்னால் நடக்க முடியவில்லை. யாராவது தூக்கி நிறுத்தினால்தான். தற்போது எந்த

வேலையும் செய்யவில்லை. இந்த விபத்திற்கு முழு காரணம் 1வது எதிர்மனுதாரர் மற்றும் அதன் ஓட்டுனர் என்றாலும் இந்த மனு வழக்கில் 5வது எதிர்மனுதாரரின் வாகனத்தில் 3வது தரப்பினராக பயணம் செய்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கை(MCOP NO. 87/2020) பொறுத்தவரை 1 மற்றும் 2வது எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

**விசாரணை முடிந்த நேரம் :** 03.10 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.